**திம்புலாகல பிரதேச சபை – 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திம்புலாகல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31ல் உள்ளவாறான சொத்துக்கள் பெறுப்புக்கள் பற்றிய கூற்று, தேறிய சொத்துக்கள் /உரிமை மூலதனம் மாற்றமடைதல் பற்றிய கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் அளவு ரீதியான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு ஏற்புடைய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது உத்தரவின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரை மற்றும் அவதானிப்புக்கள் இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன..

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தி வரையான விடயங்களின் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்கள் மூலம் 2023 திசெம்பர் 31ல் உள்ளவாறான திம்புலாகல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிச் செயலாற்றுகை, காசுப்பாய்ச்சல் ஆகியன உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பில் இலங்கையின் அரச துறையின் கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது கருத்து முனைப்பழியாக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துக்கான அடிப்படையினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சியங்கள் போதுமானதும் பொருத்தமானதும் ஆகும் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அது தொடர்பாக நிர்வகிக்கும் தரப்பினர்களதும் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பில் இலங்கையின் அரச துறையின் கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு நிர்வகிக்கும் தரப்பினர்களுக்கு உரியதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் நடைமுறை நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க முடியுமானவாறு

தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடய எல்லை (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஓட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அளவு ரீதியான பொய்யான கூற்றுக்கள் அற்றவை என நியாயமான ஓர் உறுதிப்பாட்டினை வழங்குதல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தொகுக்கப்பட்ட அறிக்கையினை வெளியிடல் எனது நோக்கம் ஆகும். நியாயமான உறுதிப்பாடு உயர்வான தரத்தினைக் கொண்ட ஓர் உறுதிப்பாடாக அமைகின்ற போதும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்ற உறுதிப்பாடாக அமைய மாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டு விளைவின் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக் கூடும் என்பதுடன் இந் நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அதனைப் பயன்படுத்துபவர்களினால் பொருளாதாரத் தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் சந்தேகக் கண்ணோட்டத்தில் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் அபாயங்களை அடையாளம் காணும் போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அபாயத்தினைக் குறைப்பதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சாட்சியங்களைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாக உள்ளது. பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினை விடவும் மோசடி காரணமாக பாரிய தாக்கம் ஏற்படும் என்பதுடன் தவறான செயற்பாடு, போலி ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்றே வழிவிடுதல், அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை வழிவிடுதல் ஆகியன மோசடிகள் நிகழ்வதற்கான காரணங்கள் ஆகும்.

- சந்தர்ப்பத்திற்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக இல்லாத போதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு நியமங்களின் பொருத்தப்பாடு கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட ஏற்புடைய வெளிக்கொணர்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டது.

- ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாய் அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமானவாறு உள்ளக்கப்பட்டுள்ளதென மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரை மற்றும் தேவையான எச்சந்தர்ப்பத்திலும் பின்வரும் விடயங்கள் பற்றிப் பரிசோதிப்பதற்காக கணக்காய்வு விடய எல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது பிரதேச சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்வதற்கு இயலுமானவாறு அதன் ஒழுங்கமைப்பு, முறைமை, நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் அளவு ரீதியாகவும் திட்டமிடப்பட்டுள்ளதா என்பது பற்றி மற்றும் குறித்த முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணப்பட்டு வருகின்றனவா என்பது பற்றி;

- ஏற்புடைய எழுதப்பட்ட சட்டம் அல்லது பிரதேச சபையால் வெளியிடப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட உத்தரவுகளுக்கு அமைவாக பிரதேச சபை செயற்பட்டுள்ளதென,

- தனது அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளதென,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாக மற்றும் பயனுள்ளவாறு கால வரையறைக்குள் மற்றும் ஏற்புடைய சட்டவிதிகளுக்கு அமைவாக பெறுகைச் செயன்முறை மேற்கொண்டு பயன்படுத்தப்பட்டள்ளதென.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கும்.

(அ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)ஈ (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திசைவாக உள்ளன.

(ஆ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)ஈ (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் முன்னைய ஆண்டு என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டுக்கு ஏற்புடையதாக ரூபா 304,212 ஆன அட்டுறு செலவுகள் கணக்குகளில் பதியப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | அட்டுறு அடிப்படையில் கணக்குகளில் பதிதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்கான நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா278,333 இனங்கண்டு கணக்குகளில் பதியப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | வருமானம் சரியாக கணக்குகளில் பதிதல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆம் திகதியன்று நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடங்கிய ரூபா 3,266,000 பெறுமதியான 06 விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் சரியாக இனங்கண்டு கணக்குகளில் பதிதல் வேண்டும். |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டில் இலத்திரனியல் நூலகங்கள் பொருட்டு கிடைத்த | சரிசெய்வதற்கு நடவடிக்கை | சொத்துக்கள் சரியாக இனங்கண்டு |

| | | | |
|---|---|---|---|
| | பொருட்களிலிருந்து 2023 ஆம் ஆண்டில் திரும்ப ஒப்படைக்கப்பட்ட ரூபா 1,351,368 பெறுமதியான பொருட்கள் மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்களில் சேர்க்கப்பட்டமையினால், நிலையான சொத்துக்கள் குறித்த தொகையால் அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தன. | எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்குகளில் பதிதல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் ஒக்டோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்குரிய மணல் அகழ்வு வருமானம் ரூபா 678,600 நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | வருமானம் சரியாக கணக்குகளில் பதிதல் வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 05 கணக்கீட்டு விடயங்கள் தொடர்பான பெறுமானங்கள், அவற்றுக்குரிய பயன்பாட்டு ஏடுகளில் காட்டப்பட்டுள்ள பெறுமானங்களுடன் ரூபா1,063,003ஆல் இணங்கவில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | மீதிகளுக்கிடையிலான வேறுபாட்டுக்கான காரணத்தை இனங்கண்டதன் பிற்பாடு சரிசெய்தல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்வு பொருட்டு எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா. | | | |
| நீர் வைப்புக்கள் | 76,200 | நாளதுவரையாக்கிய | முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வைப்பு ஏட்டினை |
| நானாவித வைப்புக்கள் | | வைப்பு ஏடு | | நாளதுவரையாக்குதல் வேண்டும். |
| | (955,532) | அட்டவணை | | ஆட்டவணையை சமர்ப்பித்தல் வேண்டும். |
| திரண்ட தேய்மானம் | 86,002,724 | தேய்மான பகுப்பாய்வு | | பகுப்பாய்வினை சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| நிலையான வைப்பு வட்டி வருமானம் | 2,388,029 | வட்டி வகுதிக்குரிய அட்டவணை<br><br>நிலையான வைப்புக்களை புதுப்பிக்கும் அறிவித்தல் | முறைமைப்ப டுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என | அட்டவணை மற்றும் மீதி உறுதிப்படுததை ல சமர்ப்பித்தல் வேண்டும. |
| நிலையான வைப்புக்களின் பெறுமதி | 18,998,903 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் | | |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | **சபையில் கருத்து தெரிவித்தல்** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | விதிகள் மற்றும் நியதிச்சட்ட ஏற்பாடுகள் | | | |
| (i) | 2018ஆகஸ்ட் 29 திகதிய 2086/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி வடமத்திய மாகாணத்தின் பிரதேச சபை பொருட்டு பிரகடனப்படுத்திய விதி இல.1.1 | ஓர் இணைந்த பிரதேச சபையின் தலைவர் ஒரு பிரதேச செயலகத்திலிருந்து மாதாந்தம் 400 லீற்றர் எரிபொருளைப் பெறுவதற்கு உரிமையுடையவர் எனினும், பதில் தலைவருக்கு வழங்கப்பட்ட PF-7441 இலக்கம் கொண்ட வாகனத்திற்கு குறித்த எல்லைக்கு அப்பால் ரூபா11,250 பெறுமதியான 25 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், இதற்கு மேலதிகமாக, 252-6532 இலக்கம் கொண்ட கெப் வண்டியும், LL-7627இலக்கம் கொண்ட க்ரூ வண்டியும் பயன்படுத்தப்பட்டு இதற்காக ரூபா 119,026 பெறுமதியான எரிபொருள் செலவிடப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சட்டங்கள், விதிகள், பிரகாரம் யெலாற்றுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை மிஞ்சிய செலவு ரூபா 17,722,076 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவுகளை மிஞ்சிய வருமானம் ரூபா 11,965,451 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கமைய மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,171,480 | 3,046,655 | 2,320,180 | 693,220 | 41,250,000 | 2,254,865 | 1,794,100 | 2,667,500 |
| வாடகை | 5,646,565 | 4,533,785 | 3,012,217 | 3,817,385 | 6,513,827 | 3,162,964 | 2,671,906 | 5,070,828 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,167,250 | 585,210 | 271,000 | 1,796,155 | 16,539,750 | 315,000 | 258,000 | 162,000 |
| ஏனைய வருமானங்கள் | 109,990,296 | 85,991,168 | 95,445,945 | 59,832,574 | 13,300,000 | 68,394,491 | 32,453,304 | 76,499,798 |
| | -------------- | ------------- | -------------- | ------------- | ------------- | ------------ | ------------- | ------------- |
| மொத்தம் | 118,975,591 | 94,156,818 | 101,049,342 | 66,139,334 | 77,603,577 | 74,127,320 | 37,177,310 | 84,400,126 |
| | ========= | ======== | ========= | ======== | ======== | ======== | ========= | ======== |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றுகை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வாடகை** | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று, நிலுவை கடை வாடகை வருமானம் ரூபா 941,729 ஆக இருந்ததுடன், நிலுவை வார சந்தை வரி வருமானம் ரூபா 2,369,614 ஆக இருந்தது. | நிலுவை வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், நீண்ட காலமாக நிலுவையில் உள்ள மீதிகளுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானத்தை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | **அனுமதிப் பத்திரக் கட்டணம்** | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று, வர்த்தக அனுமதிப்பத்திர, கைத்தொழில் வரி மற்றும் வியாபார வரி நிலுவை வருமானம் ரூபா 2,421,875 உள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானத்தை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ)** | **ஏனைய வருமானங்கள்** | | |
| | சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின்படி, 2023 ஆம் ஆண்டில் 04 நீர் செயற்றிட்டங்கள் தொடர்பாக சேகரிக்கப்பட வேண்டிய வருவாய் ரூபா 68,431,230 ஆக இருந்ததுடன், 2023 திசெம்பர் 31ஆம் திகதியன்று, நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 20,234,226 ஆக இருந்தது. இதன்படி, வருமானத்தில் 29 சதவீதம் நிலுவை வருமானமாக இருந்தது. | நிலுவை நீர்க் கட்டண வருமானத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **<u>துணைவிதி</u>** | | |
| | பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் துணைவிதி விதிக்க வேண்டிய வார சந்தை வரி, முச்சக்கர வண்டிக் கட்டணங்கள் மற்றும் விற்பனை ஊக்குவிப்புத் திட்டங்கள் ஆகிய 03 விடயங்கள் பொருட்டு துணைவிதிகள் விதிக்கப்படவில்லை. | தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | துணைவிதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஆ) **செயல் நடவடிக்கைத் திட்டம்**

| | | |
|---|---|---|
| சபையின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 36 செயற்பாடுகளை குறிப்பிட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் எந்தவொரு செயற்பாட்டினையும் நிறைவேற்ற தவறியிருந்தது. | செயற்பாடுகளில் ஒரு பகுதியை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தை செயற்படுத்த வேண்டும். |

(இ) **கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டிலும் அதற்கு முந்திய வருடங்களிலும் 14 அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 24,044,236 அதற்கென செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆம் திகதி வரையிலும் எதிர்பார்த்த பெறுபேறுகளைப் பெறாமல் அவை கைவிடப்பட்டிருந்தன. | தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்த்த பெறுபேறுகளைப் பெறுதல் வேண்டும். |

## 3.2 பொருளாதாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்பள்ளி மற்றும் பகல்நேர பராமரிப்பு நிலையத்தின் விளையாட்டு முற்றத்திற்கு தேவையான உபகரணங்கள், சிறுவர்களுக்கான மேசைகள் மற்றும் கதிரைகள் கொள்வனவு தொடர்பான கேள்விமனு மதிப்பீட்டு அறிக்கையின்படி, அனைத்து கேள்விதாரர்களும் குறைபாடுகள் இன்றி கேள்விமனு ஆவணங்களை சமர்ப்பித்து அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்திசெய்திருந்த போதிலும், குறைந்த தொகையை சமர்ப்பித்த நிறுவனத்தை தெரிவுசெய்யாமல், பொறியியலாளர் மதிப்பீட்டுக்கு கூடுதலாக விலை சமர்ப்பித்த நிறுவனத்தை தெரிவுசெய்தமைக்கான காரணங்கள் மற்றும் ஏனைய கேள்விதாரர்கள் நிராகரிக்கப்பட்டமைக்கான | 10 வழங்குநர்களிடம் இருந்து விலைகள் கோரப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனம் முன்வைத்த விடயங்களின் ஒட்டுமொத்த அளவையும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்பதுடன் தெரிவுசெய்த நிறுவனம் அனைத்து விடயங்களுக்கும் விலைகள் சமர்ப்பித்திருந்தது. மேலும், உபகரணங்களை வழங்குவதில் அனுபவம் மற்றும் தரம் பற்றிய சான்றிதழின் அடிப்படையில் கேள்விமனு வழங்குவதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவும், பெறுகை குழுவும் முடிவு செய்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டுநெறிகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்தலாகாது. |

| | | | |
|---|---|---|---|
| | காரணங்களை குறிப்பிடாமல் குறைந்த பட்ச விலையை விட ரூபா 1,601,580 அதிகமாக செலவிடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | CDLG செயற்றிட்டத்தின் கீழ், பெண் பாராளுமன்ற உறுப்பினர்களை வலுவூட்டும் பொருட்டு கிடைத்த ரூபா 500,000 நிதியேற்பாட்டினை பயன்படுத்தி குறைந்த வருமானம் கொண்ட 25 குடும்பங்களுக்கு தேவையான ரூபா.485,650 பெறுமதியான உபகரணங்கள் பகிரப்பட்டன. 05 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா97,125 பெறுமதியான பொருட்கள் பயன்பெறாது வீடுகளில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டதுடன், தையல்காரர் ஒருவருக்கு உணவு உற்பத்தி உபகரணங்கள் வழங்கப்பட்ட சந்தர்ப்பமும் இடம்பெற்றிருந்தது. | பயன்பெறாத பொருட்களை பயன்படுத்துமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எழுத்து மூலமாகவும், வாய் மூலமாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பாவனைக்கு எடுக்கும் தரப்பினர்களை சரியாக இனங்கண்டு பொருட்களை பகிர்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திம்புலாகலை பிரதேச சபைக்குச் சொந்தமான கடை அறைகளுக்கு ஏற்புடைய 21 நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகை வருமானம் ரூபா559,590 ஆக இருந்த போதிலும், சபையின் கோப்புகளில் உள்ள குறைபாடுகள் காரணமாக 06 நபர்களுக்கு ஏற்புடைய ரூபா166,170 நிலுவை வருமானத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாமல் இருந்தமையினால் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களிடம் இருந்து அப்பணத்தை அறவிட்டுக்கொள்ள வேண்டியிருந்தது. | குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிட்டுக் கொள்வதற்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மனம்பிட்டி இலக்கம் 09 கடைஅறை 2018 – 2020 ஆண்டுகளில் வாடகைக்குவிடப்பட்டு அதற்கான நிலுவைத் தொகை ரூபா76,680 ஒப்பந்தக் குறைபாடுகள் காரணமாக அறவிட்டுக் கொள்வதற்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சபை தவறியிருந்ததுடன், பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவைத் தொகையை சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் இருந்து அறவிட்டுக் கொள்வதற்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | வார சந்தைகள் தொடர்பாக ரூபா 953,250 நிலுவை ஒப்பந்தங்கள் இல்லாததாலும், வாடகைஎடுத்தவர்களின் தகவல்கள் சபையிடம் இல்லாததாலும் அறவிட முடியாத நிலையில் இருந்ததுடன், சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கக்கூடியதாக இருந்த ரூபா1,644,495 நிலுவையையும் அறவிட்டுக் கொள்வதற்கு சபை எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. | ஒப்பந்தம் இல்லாத குத்தகைதாரர்கள் தவிர்ந்த குத்தகைதாரர்களிடம் இருந்து நிலுவை வார சந்தை கட்டணங்களை அறவிட்டுக் கொள்வதற்கான சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவைத் தொகையை சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் இருந்து அறவிட்டுக் கொள்வதற்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | நுவரகல மற்றும் சிறிபுர நீர் செயற்றிட்டங்களில் நீர் சுத்திகரிப்பு வடிகட்டிகளில்(பில்டர்) மணலின் அளவு இருக்க வேண்டிய மட்டத்தை விட மிகக் குறைந்த மட்டத்தில் இருந்தபோதிலும், வடிகட்டி பொருட்டு கல் இடாமையினால் வடிகட்டியில் உள்ள கல் அடுக்கில் சேறு படியும் அபாயமும், அதனால் முழு வடிகட்டியும் சேதமடையும் அபாயமும் உள்ளது. | தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நீர் செயற்றிட்ட பராமரிப்பு வேலைகளை தாமதித்தலாகாது. |
| (உ) | 2023 ஏப்ரல் 20 ஆம் திகதிய DIM/2023/14/20/66ஆம் இலக்க குழு தீர்மானத்தின்படி, சுத்திகரிக்கப்பட்ட மணலைக் கொள்வனவு செய்ய முடிவு செய்யப்பட்டிருந்த போதிலும், குறித்த முடிவின் கீழ் மணல் கொள்வனவு செய்தல் தொடர்பான எந்த நடவடிக்கையும் சபை எடுக்கவில்லை. | பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | நீர் செயற்றிட்டங்களை உரியவாறு பராமரிப்பு செய்ய வேண்டும். |
| (ஊ) | 04 நீர் செயற்றிட்டங்கள்மூலம் 6,789 நீர் இணைப்புகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் பொருத்தப்பட்டிருந்த 1,124 மானிகள், அதாவது 16 சதவீதம் செயலற்ற நிலையில் காணப்பட்டன. | எஞ்சிய நீர் மானிகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | தேவையான நீர் மானிகளை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா.225,875 மற்றும் ரூபா 431,175 பெறுமதியான இரண்டு சொத்துகளுக்கு ஏற்புடையதாக சொத்தை இனங்காணாமல் பெறுமதி மட்டும் சேர்க்கப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது | நிலையான சொத்துக்களை சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | திம்புலாகல பிரதேச சபையின் 2019, 2020, 2021 ஆம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட 76 செயற்றிட்டங்களுக்கு ஏற்புடையதாக முற்பணமாக ரூபா1,626,116 வழங்கப்பட்டிருப்பினும், செயற்றிட்டப் பணிகள் நிறைவேற்றப்படவில்லை என்பதுடன், முற்பணத்தை மீள அறவிட்டுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அறவிட்டுக் கொள்வதற்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | முற்பணத்தை அறவிட்டுக் கொள்வதற்காக பொறுப்பான தரப்பினர்களுக்கு எதிராக சட்டரீதியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | 2015 பெப்ரவரி 20ஆம் திகதி கொள்வனவுசெய்து, சபையின் சொத்துக்களாக பதிவேட்டு ஏட்டில் பதியப்பட்ட 05 டெல் மடி கணினிகள் மற்றும் 02 IPADகள என்பன, ஏழு முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு 08 ஆண்டுகளுக்கு மேலாகியும் அவை மீண்டும் சபைக்கு வழங்கப்படவில்லை. என்பதுடன் 05 மடி கணினிகள் மற்றும் ஒரு IPAD என்பனவற்றை திருப்பிச் செலுத்த முடியாத 06 உறுப்பினர்களினால் அதற்குரிய பெறுமதி 2019 யூன் 26 ஆம் திகதி முதல் 30 தவணைகளில் செலுத்த ஒப்புக்கொண்டிருந்த போதிலும், அந்த கொடுப்பனவையும் செலுத்தாது இருந்தமையினால் சபைக்கு ரூபா 722,999 நட்டம் ஏற்பட்டிருந்தது. | உரிய பெறுமதிகளை சபைக்கு செலுத்துமாறு எழுத்துமூலம் தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்குகள் பற்றிய குழுவின் பரிந்துரையின்படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | 2014 திசெம்பர் 16 ஆம் திகதி சபைக்கு வழங்கப்பட்ட 360 நாகம்பூசிய கொடிக்கம்பங்கள் முன்னாள் தலைவர் மற்றும் 05 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு 09 வருடங்களுக்கு மேலாகியும் அவை சபைக்கு கிடைக்கவில்லை. | உரிய உறுப்பினர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்குகள் பற்றிய குழுவின் பரிந்துரையின்படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | 2016 யூன் முதல் 2017 யூன் 28 வரையிலான காலப்பகுதியினுள், நீர்க் | கணக்காய்வு மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பெறுமதிக்கு | உறுதிப்படுத்தல்களை சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டணத்தை அறவிடும்போது, பெறுவனவு பற்றுச்சீட்டுக்களின் மூலப் பிரதியில் குறிப்பிடும் தொகையை விட குறைந்த தொகையை இணைப்பிரதியில் குறிப்பிட்டு ரூபா2,625,660 இழக்கப்பட்டமை தொடர்பாக செயலாற்றுகையில் ஒழுக்காற்று நடவடிக்கை கோவையின் 23.7 பிரகாரம் செயல்படுமாறு ஒழுக்காற்று கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், இழக்கப்பட்ட தொகை ரூபா1,711,782 ஆக குறிப்பிட்டு ஒழுக்காற்று கட்டளை பிறப்பிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 913,877 பொருட்டு ஒழுக்காற்று கட்டளை விதிக்கப்படவில்லை. | ஏற்புடையதாக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, அறவிடும் பணிகள் நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஔ) | 2011 ஆம் ஆண்டில், திம்புலாகல பிரதேச சபையின் வருமான நிருவாகியினால் மேற்கொள்ளப்பட்ட நிதிசார் நட்டம் ரூபா 1,367,681 என இனங்கண்டு, 2021 திசெம்பர் 27 திகதியன்று ஒழுக்காற்று கட்டளை பிறப்பிக்கப்பட்டிருப்பினும், 2024 மே மாதம் வரையிலும் இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதுடன் நிதிக்கூற்றுக்களிலும் வெளிப்படுத்தப்படவில்லை. | சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டரீதியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (க) | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 42 பிரகாரம், கணக்காய்வுமூலம் கோரப்பட்ட தகவல்கள் மற்றும் அறிக்கைகளை 21 வேலை நாட்களுக்குள் சமர்ப்பிக்காமை குற்றமாகும் என்பதுடன், 04 கணக்காய்வு விசாரணைகளுக்கான பதில்களை சமர்ப்பித்தல் 03 மாதங்களுக்கும் மேலாக தாமதமாகி இருந்தது. | பதில் வழங்கப்படாத சகல கணக்காய்வு விசாரணைகளுக்கும் பதில் தயாரிக்கப்பட்டு வருகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்காய்வு விசாரணைகளுக் கான பதில் உரியவாறு வழங்கப்படுதல் வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் LDSP செயற்றிட்ட நிதியத்தினால் அரலகங்வில சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு நன்கொடையாக வழங்குவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 253,750 பெறுமதியான பிளாஸ்டிக் கதிரைகள் அரலகங்வில பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி | பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் கதிரைகளைப் பெற்றுக் கொள்ள மறுத்தமையினால், சபையுடன் இணைந்த ஏனைய அலுவலகங்கள் பொருட்டு வழங்குவதற்குத் | நிதியைப் பயன்படுத்துவ தற்கு முன்பு கொள்வனவுக் கான தேவையை இனங்கண்டு அதன்படி செயலாற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலகம் நிராகரித்தமையினால் 02 வருடங்களாக பயன்பெறாது காணப்பட்டன. | தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2022 யூலை 11 ஆம் திகதியன்று, ரூபா 2,442,000 செலவிட்டு கொள்வனவு செய்த வாகன கழுவு நிலையத்துக்குத் தேவையான பொருட்களில் ரூபா 1,280,000 பெறுமதியான உபகரணங்கள் வாங்கிய திகதியிலிருந்து இதுவரை பயன்பெறாத நிலையில் காணப்பட்டன. | தற்போது சபைக்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் சேவைநிலைப்படுத்தலை மேற்கொள்வதற்காக உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சரியாக திட்டங்களை தயாரித்து செயற்றிட்டங்களை ஆரம்பித்து செயற்படுத்த வேண்டும். |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| பிராந்திய அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டத்தின் கீழ், முன்பள்ளியில் வேலி அமைப்பதற்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு அவசர தேவையில்லாத சந்தர்ப்பத்தில் மதிப்பிடப்பட்ட விலையை விட ரூபா 363,872 பெறுமதிக்கு வழங்குநர் தெரிவுசெய்தலானது பெறுகை வழிகாட்டுநெறி கோவையின் பந்தி 3.8 க்கு முரணானதாக இருந்தது. | 06 பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து விலைகள் அழைக்கப்பட்டதுடன், ஒருவர் மட்டும் விலைகளை சமர்ப்பித்தார். பதிலளித்த சிறந்த கேள்விதாரரான நிறுவனத்திற்கு கேள்வியை வழங்குவதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவும், பெறுகை குழுவும் முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டுநெறிகளின்படி செயலாற்றுதல் வேண்டும். |

### 3.6 ஒப்பந்த நிருவாகத்தின் குறைபாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உலக வங்கி உதவி செயற்றிட்டங்களின் கீழ் நிருமாணிக்கப்படும் செயற்றிட்டங்களுக்கு கல்நார் (அஸ்பெஸ்டோஸ்) கூரைத்தகடுகள் பயன்படுத்தல் நிறுத்தப்பட்டுள்ள நிலையில், அஸ்பெஸ்டோஸ் கூரைத்தகடுகளைப் பயன்படுத்தி கூரை அமைக்க பொறியியல் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன எனவும், அதனால் | இக்கட்டடத்தின் கூரை நீளத்திலும் அகலத்திலும் ஏனைய கட்டடங்களுடன் ஒப்பிடும் போது அதிக வீச்சளவினைக் கொண்டிருப்பதால், வெட்டுமரத்தைப் பயன்படுத்துவது பொருத்தமற்றது என்பதால், | சரியான திட்டம் மற்றும் மதிப்பீடுகளை தயாரித்து செயற்றிட்டங்களை செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அந்த வேலை விடயங்கள் ஒப்பந்தம் வழங்கப்பட்டதன் பிற்பாடு கைவிடப்பட்டு, அதற்குப் பதிலாக BS தரத்துக்கு மேல் தர பெறுமதியுடைய மேலதிக வேலை விடயங்களின் கீழ் கூரை வேய்தல் செய்யப்பட்டன. இவ்வாறு சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகளை பின்பற்றாமல் மதிப்பீடு தயாரித்தல் காரணமாக, கூரையை அமைப்பதற்கு ரூபா 2,034,402 மேலதிக செலவு உறப்பட்டிருந்தது. | பொறியியலாளரின் ஆலோசனையின் பேரில், இரும்பு, கெண்டை மற்றும் சீ பேர்லின் ஆகியவற்றைப் பயன்படுத்தி கூரை சட்டகம் தயாரிக்கப்பட்டதுடன் , அமானோ கூரைத் தகடுகளைப் பயன்படுத்தி கூரை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | பெறுகை வழிகாட்டுநெறி கோவையின் பந்தி 8.13.4 பிரகாரம், மாறிலிகளின் சராசரி பெறுமதி நிச்சயமற்ற நிதியேற்பாட்டு எல்லையை விஞ்சுவதாயின், திணைக்களத் தலைவர் மொத்த செலவு மதிப்பீட்டை மறுபரிசீலனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், முன்பள்ளி மற்றும் பகல்நேர பராமரிப்பு நிலைய நிர்மாண செயற்றிட்டத்தின் மொத்த செலவு மதிப்பீடு ரூபா 32,610,412 ஆக இருக்கும்போது, தேறிய விலகல் ரூபா 16,273,483 அதாவது மொத்த செலவு மதிப்பீட்டில் 50 சதவீதமாக இருந்தபோதிலும், மதிப்பீட்டினை மறுபரிசீலனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கட்டுமான மூலப்பொருட்கள், சேவைகள் மற்றும் போக்குவரத்து செலவுகள் என்பன வேகமாக அதிகரித்தமை காரணமாகவும், பல கட்டங்களாக முடிக்க வேண்டிய பணியை ஒரே கட்டத்தில் முடிப்பதற்கு அங்கீகரித்தமையினாலும் மதிப்பீட்டுப் பெறுமதி அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டுநெறி கோவைக்கு இணங்க செயலாற்றுதல் வேண்டும். |
| (இ) | பிராந்திய அபிவிருத்தி உதவித் திட்டத்தின் PT-02 இன் கீழ் முன்பள்ளியின் GI வேலி அமைப்பதற்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்யும் திட்டத்திற்காக தொழில்நுட்ப அலுவலரினால் ரூபா2,691,300 பொருள் மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அம்மதிப்பீட்டினை தயாரித்த திகதியோ அல்லது பரிசோதித்த திகதியோ குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பதுடன் பயன்படுத்திய BSR தரங்கள், ஏற்புடையதாக்கிய காலப்பகுதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | மொத்த செலவு மதிப்பீட்டினை சகல விபரங்களுடன் தயாரித்தல் வேண்டும். |

### 3.7 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியன்று பதவியினர் தகவல்களின்படி, அங்கீகரித்த பதவியினர் 71 ஆக காணப்பட்டதுடன் அதில் 14 வெற்றிடங்கள் காணப்பட்டன. | உரிய நிறுவனங்களுக்கு தெரியப்படுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது | வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொறுப்புள்ள பிரிவுகளுக்கு அறிவித்தல் வேண்டும். |
| (ஆ) | 2010 ஆம் ஆண்டிலிருந்து அறவிட வேண்டியுள்ள ரூபா144,058 ஆன 07 கடன்மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்கு செயலாற்றிருக்கவில்லை. | அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | கடன்மீதிகளை விரைவாக தீர்த்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பிரதேச சபை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 01 கூட்டத்தை மட்டுமே நடத்தியிருந்தது. | உரியவாறு நடத்துதல் தொடர்பாக செயலாற்றுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தை உரியவாறு நடத்துதல் வேண்டும். |

### 4.2 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 இல் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் காலாவதியான 15 அனுமதிப்பத்திரதாரர்கள் அந்த அனுமதிப்பத்திரங்களை மீண்டும் பெற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெரும்பாலான கைத்தொழிலாளர்கள் சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கு முன்வந்துள்ளனர் எனவும், இறுதி நினைவூட்டல்களுக்கு பதிலளிக்காதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | தேசிய சுற்றாடல் சட்டத்தின்படி, சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் வேண்டும். |